


# சிலுவையால் சீர் கொண்ட பெண்மை

எழுதியவர் - டிசெல்வா -வெலிங்டன் -ஊட்டி மறைமாவட்டம் -
அலைப்பேசி எண் - 09025029593

## சிலுவையால் சீர் கொண்ட பெண்மை

கிறிஸ்துவை அறிந்துக்கொள்ள நற்செய்தியை புறட்டும் போது, அன்று அவருடன் வாழ்ந்த பெண்கள்; மிக எளிமையாக இயேசுவை அணுகியதை வாசிக்கின்றோம். அர்த்தமுள்ள பல புதுமைகள் பெண்களை மையமாகக் கொண்டு நிறைவேறியுள்ளன.

கிறிஸ்துவின் காலத்தில், பெண்கள் சுதந்திரம் இல்லாதவர்கள். ஆண்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள். இருந்தும், இவர்களே - இயேசுவை அதிகம் பயன்படுத்தி உள்ளார்கள். இதில் வரும் 13 நிலைகளில் அத்தகைய பெண்களைச் சார்ந்த நிகழ்வுகள், தியானிக்கப்பட்டுள்ளன.

இந்த 21-ம் நூற்றாண்டு பெண்கள் சுதந்திரமும், சுய சிந்தனைகளும், சமுதாய ஆளுமையும் உள்ளவர்கள். அப்படியிருக்க இந்த இயேசுவின் அருகாமை; எந்த அளவிற்கு இவர்களில் உள்ளது?

அன்று வாழ்ந்த பெண்களுள், இயேசுவால் காணப்பட்ட சிறப்புகளை நாம் இந்த சிலுவை வழியில் காண முழந்தாளிடுவோம். முற்போக்கு சிந்தனை உள்ள நமக்குள் இயேசு எதைக் காண ஆசைப்படுகிறார்? என்று அறிந்துக்கொள்ள;

**"நடப்போம் சிலுவையின் வழியில்."**

நம்முடன் இன்றும் கிறிஸ்த்துவிற்காக, இந்த தமிழக கத்தோலிக்க திருச்சபையில் தங்களை முழுமையாய் அர்ப்பணித்த; தமிழக துறவற சகோதிரிகளுக்கு, இந்த சிந்தனை தொகுப்பு சமர்ப்பணம்.

இவன்
உங்கள்
**"அயலான்"**

**முதல் நிலை: இயேசுவை சிலுவை மரணத்திற்கு தீர்ப்பிடுகிறார்கள்.**

மத்1:18-21-ல் கன்னியானமரியாள் இறைமகனை ஈன்றெடுக்க அழைக்கபடுவதைப் பற்றி படிக்கின்றோம். ஆம், இங்கு ஒரு கன்னியானவள், மகப்பேற்றை அடைய அழைக்கப்டுகிறாள்.

“ குற்றவாளிகளுக்கு தண்டனை தீர்ப்பு அளிக்கப்படுவதும், திருமணவாழ்வில் இணைந்த பெண் குழந்தை பாக்கியம் பெறுவதும் மிகவும் சரியானதே,” ஆனால் குற்றமற்றவரும் நேர்மையானவருமான ஒருவர் தண்டிக்கப்பட்டு, சிலுவை சாவிற்கு கையளிக்கப்படுவதும்; சமுதாய மரபுகளுக்கு மாறாக சாதாரண ஒரு பெண், இல்லற வாழ்வை அறியும் முன் குழந்தைப்பாக்கியம் பெறுவதும, எந்த வகையில் நியாயம்.?

பாருங்கள், சரித்திரத்தில் மனிதரால் தவறு என ஏற்றுக்கொள்ளப்பட்டவை, இறைவனின் பார்வையில் சரியென நிறைவேற்றப்பட்டன. முடிவு இந்த உலகம்

**மன்னிப்பு மீட்பு, சமாதானம்** ஆகியவைகளை பெற்று இன்றுவரை அனுபவித்துக்கொண்டிருக்கிறது. இயேசு மனித அவதாரம் எடுக்க பிதாவானவர், அவருக்கு தந்த **கடமையும்,** கன்னிமரியாள் தன்னை ஆண்டவரின் அடிமையென ஏற்றுக்கொண்டதால், அவருள் மலர்ந்த **ஏற்புடமையும்**, மனித குலம் மீண்டும் இறைவனோடு ஒன்றாகி - இந்த உலகையே இனபவனமாக்கும் ‘**மூலதனம்**’ ஆயின.

நமது கடமையும் ஏற்புடமையும், இந்த மண்ணில் மீண்டும் இன்பவனம் (ஆதி-2:8) மலர, மூலதனம் ஆகட்டும்.

**ஜெபம்.**

இறைவா, இம்மண்ணுலகம் மீண்டும், ஆதியில் நீர் தந்த இன்பவனமாய் மலர்ந்திட, மன்னிப்பும் அன்பும் கொண்ட சிலுவை மரங்களாய் எங்களை வளர்த்திட, எங்களுள் உள்ள **‘கடமை உணர்வும் ஏற்புடமையும்’** எங்களை அனுதினம் வழி நடத்தட்டும்.

**இரண்டாம் நிலை: இயேசுவின் தோள்மீது பாரச்சிலுவையை சுமத்துகிறார்கள்.**

தன்னால், தனியாக சுமக்க இயலாத பாரச்சிலுவையை; அருள – 19 -17-ல் இயேசு, தனியே தாமே சுமந்துக்கொண்டு; எபிரேய மொழியில், கொல்கொத்தா எனப்படும் இடத்திற்கு சென்றார் என்று கூறுகிறது.

லூக்-1.36-ல் கபிரியேல் தூதர், மரியாளிடம் இதோ முதிர்ந்த வயதில் உம் உறவினளான எலிசெபெத்தும், ஒரு மகனை கருத்தரித்திருக்கிறாள். மலடி எனப்படும் அவளுக்கு இது 6-ம் மாதம் என்று கூறினார்.

இயேசு மனிதம் புனதம் பெற, இவ்வையகத்தோர் வான்வீடு வர; இயலாமையிலும் இனிதே தனியே சிலுவையை சுமந்தார்.

மீட்பரை இவ்வுலகம் அடையாளம் கண்டுக்கொள்ள, முதிர்ந்த தள்ளாத வயதில் எலிசெபெத் அம்மாள் குழந்தையை சுமந்தாள். இவ்விருவரும் இவ்வையகத்தோர் வாழ்வுபெற, **இயலாமையிலும் முதிர்ந்த வயதிலும் இறைச்சித்தம் எனும் சுமைகளை** சுமந்தனர்.

இன்று நமது வாழ்க்கயையில் நமது இயலாமைகளில் அல்ல, **இயன்ற பொழுது** இறைவன் தரும் சுமைகளை எப்படி சுமக்க முன் வருகின்றோம். சற்று யோசிப்போம்.

அருள-11.30-ல் என் சுமை எளிது என்று இயேசு கூறுகின்றார். எளிமையானதை செய்வதில் நிச்சயம் நமக்கு ஆர்வம் அதிகம், எனவே இயேசுவை என் சகோதரத்தை நிறைமனதோடு சுமப்போமே.

**ஜெபம்**

உமது சித்தத்தை எமது வாழ்வின் சுமையாக ஏற்று, ‘**உமது சுமைகள் எளிது’** ‘என்பதை உணர்ந்திட அருள்தாரும்.

**மூன்றாம் நிலை : இயேசு சிலுவையின் பாரத்தால் முதல் முறை கீழே விழுகின்றார்.**

நமது வாழ்வில் வார்த்தையை, வார்த்தையான இயேசுவின் மொழிகளை, கேளாவிடில் முதல் ஏவாள் போல் நாமும், இன்ப வனத்தில் இருந்து வெளியே செல்ல வேண்டியவர்கள் ஆவோம்.

லூக்-10-39-42-ல் -மார்த்தாளோ பலவகையாய் பணிவிடை புரிவதில் பரப்பரப்பாய் இருந்தாள் என்றும், ஆனால் அவருடைய 'சகோதரி மரியாள் ஆண்டவருடைய காலடியில் அமர்ந்து அவருடைய வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருந்தார்' என்றும் கூறுப்படுகிறது.

இயேசு நம் மத்தியில் வாழ்கின்ற தேவனாக இருக்கின்றார்............ இது நம்முடைய விசுவாச உண்மை. அப்படியிருக்க நாம் மார்த்தாளாகவா? அல்லது மரியாளாகவா? இயேசுவோடு இணைந்திருக்கின்றோம்.

அநேக வேளைகளில் நமது வாழ்வு, நாம் ஈடுபடும் இறை வழிபாடு சார்ந்த பல காரியங்களில், ஏன் இந்த சிலுவை பாடு தியானங்களில் கூட; மார்த்தாளைப் போல் பல காரியங்களில் கவனம் கொண்டுள்ளோமா? அல்லது மேற்குறிப்பிட்ட எல்ல **வழிபாடு சார்ந்த செயல்களின் மையமான** - உயிரான இறைவனின் **..........**

**இயேசுவின் வார்த்தைகளில்** கவனம் கொண்டுள்ளோமா.

இயேசு அவரது வார்த்கைளைக் கேட்ட மரியாள்,
**நல்ல பங்கை தேர்ந்து கொண்டாள்** என்றும்,
மேலும் அது அவளிடமிருந்து எடுக்கப்படாது என்றும் கூறினார்.

முதல் ஏவாள் இறை வார்த்தையை கேளாததால், இன்ப வனத்தில் தன் தனி வாழ்வில் கீழே விழுந்தாள். இரண்டாம் ஏவாள் அன்னை மரியாள் இறை வார்த்தையைக் கேட்டதால், உலகிற்கு மீட்பை தந்தாள்............. இயேசு கூறுகின்றார்

**'கேட்க செவியுள்ளவன் கேட்கட்டும்'** என்று.

**ஜெபம்**

வாழ்வு தரும் வார்த்தையாம் என் இயேசுவே, **நல்ல பங்கை** நாங்கள் தேர்ந்தெடுக்க உமது காலடியில் அமர்ந்திடவும; அந்த வார்த்தைகள் நாங்கள் இடறல் பட்டு கீழே விழாமல் இருக்க ஊன்று கோலாய் உதவட்டும்.

**நான்காம் நிலை: தாய் மரியாள் இயேசுவை கல்வாரியின் பாதையில் சந்திக்கின்றார்.**

எந்த ஒரு தாயும் தனது மகனை காணக்கூடாத, ஓர் அகோர நிலையில் கல்வாரியின் பாதையில் இயேசுவை காண்கின்றார்.

லூக்- 1-39,56-ல் அன்று மரியாள் புறப்பட்டு யூத மலை நாட்டில் உள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்று, சக்கிரியாசின் வீட்டிற்கு வந்து; எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் அவரோடு தங்கி இருந்த பின்பு, வீடு திரும்பினார் என்று கூறப்பட்டுள்ளது.

இன்று விஞ்ஞான உலகின் பிடியில் வாழும், நமது உறவுகளின் சந்திப்புகள் மின் காந்தமயமான மின் அலை இணைப்பு வலைகளாய்; நொடிப்பொழுதில் உலகின் ஒரு முனை முதல், மறுமுனை வரை பின்னப் படுகின்றன. முகமுகமாய் கண்டு பேசவும் ஆவன செய்கின்றன.

அன்றோ, எந்தவொரு வாய்பு வசதிகள் இல்லாத நிலையில்; மரியாள் எலிசபெத்து சந்திப்பு நிகழ்ந்தது. கல்வாரி பாதையிலோ, பெண்களுக்கு பொது இடங்களில் எந்தவொரு சுதந்திரமும் கொடுக்கப்படாத காலகட்டத்தில்; தன்உயிரை துச்சமென மதித்து மரியாள் மகனை சந்தித்தார்.

மரியாள் எலிசபெத் சந்திப்பு, இயேசுவை உலகோர்க்கு மீட்பர் என அடையாளம் காட்ட; **ஸ்நாபக அருளப்பரை பெற்றுத்தந்திட உதவிற்று.** சிலுவை பயணத்தில், இயேசு மரியாள் சந்திப்பு; கல்வாரியின் உச்சியில் **உலகின் மீட்பை பெற்றுத்தந்திட உதவிற்று.**

வசதியும் வாய்ப்பும் அதிகமுள்ள இந்த காலக்கட்டத்தில் நமது சந்திப்புகள் எதற்காக? எப்படி? ஏன்? நிகழ்கின்றன, முடிவில் அவை எதை தருகின்றன.?

**ஜெபம்**

இறைவா என்னோடு வாழும், **எனது சகோதரர் இயேசுவையும், சகோதரி மரியாளையும்** நான் கண்டுக்கொள்ள, **எனது சந்திப்புக்கள்** என்றும் பயன்பட உமது ஆவியின் துணையைத்தந்தருளும். எனது சகோதரமும் நல்ல கனிதரும் மரமாக, எம்மை என்றும் கண்டு மகிழ அருள்தாரும்.

**ஐந்தாம் நிலை: சீரோனே ஊரானாகிய சிமியோன் இயேசுவின் சிலுவையை சுமக்க உதவுகின்றார்.**

கல்வாரியில் சிலுவையில் அறையப்படும் வரை, இயேசு உயிரோடு வரவேண்டும் என்பதற்காக காவலர்கள், சிமியோனை சிலுவையை சுமக்க நிர்ப்பந்திக்கின்றனர். அவரோ, யாருக்கு என்று அறியாமலே சுமந்து சென்றார்.

அருள-2,3-6-உள்ள வார்த்தைகளில் திருமண வீட்டில் ரசம் தீர்ந்து விடவே, நேரம் வருமுன்னே பணியாளர்களை - நீர் நிரப்பும் பணியில் அமர்த்திட அன்னை மரியாள், இயேசுவை நிர்பந்திக்கின்றார். … காவலரின் வார்த்தையை சிமியோனும், அன்னை மரியாள் வழியாக இயேசுவின் வார்த்தையை பணியாளர்களும் **ஏற்று, மனமுவந்து செயல்பட்டதால்**

**கல்வாரியில் உலக மீட்பும், திருமண வீட்டில் நிறை மகிழ்வும்**; நிலை படுத்தப்பட்டன.

அருள-11,43-44-ல் உள்ள நிகழ்வை சற்று தியானிப்போம்.

**லாசரே வெளியே வா**……….உயிர் தந்த அற்புத அழைப்பு. உயிர் பெற்றவன் எழுந்து நடக்கும்போதுதான் உயிருக்கு பெருமை. எனவே இயேசு அங்கிருந்தோரை பார்த்து, கட்டவிழ்த்து அவனை போக விடுங்கள் என்றார். ‘‘**குகை மூடிய கல்லை நகர்த்துவது தனி மனிதனுக்கு சிரமமானதுதான்**’’. மாறாக **கட்டுகளை அவிழ்க்க இரு கரங்கள் போதுமே.**

ஆம், …… சிமியோனாக, அன்னை மரியாளாக; நமது சகோதரத்தின் நிறை வாழ்விற்கு தடையாக, உள்ள **‘கட்டுகளை அவிழ்த்துவிட’** ஆண்டவர் அழைக்கின்றார்.

நம்மால் அன்னை மரியாள், சிமியோனாக வலம் வர முடியாவிட்டாலும் **‘இயேசு முன் நிற்கும் பணியாளர்களாக’** பயன் தருவோம். ஏனெனில் ஒவ்வொரு சகோதரமும் வானக வாழ்விற்கு உரிமை உள்ளோரே.

**ஜெபம்** -

இறைவா இன்றைய சமுதாய அமைப்புமுறைகளில், எங்களால் சுமைகளை சுமக்க இயலாவிட்டாலும், அச்சுமைகளால் நடை **பாதிக்கப்பட்டோரின் கட்டுகளை அவிழ்த்துவிட** எமது கரங்கள் நீளட்டும்.. உமது ஆவியின் கொடையால் நிரப்பியருளும். ஆமென்.

**ஆறாம் நிலை: வெரோணிக்காள் என்ற பெண் இயேசுவின் திருமுகத்தை துடைக்கின்றாள்.**

வெரோணிக்காளைப்பற்றி விவிலியம் கூறவில்லை, புனிதமரபால் அவரது செயல், அதன் பயனை இன்று நாம் நினைவுகூறுகின்றோம். கல்வாரி பாதையில் அவருடைய செயல், இயேசுவிற்கு கிடைத்த ஒரு சிறு ஆறுதல். ஆனால் இன்று உலகம் அதன் பலனாக, ஆண்டவரின் அழகு முகத்தை கண்டு, மகிழந்து, ஆராதிக்கின்றது.

மார்க்கு 5, 25-34-ல் உள்ள நிகழ்வுகள் 12 ஆண்டுகள் பெரும்பாடுள்ளபெண், இயேசுவின் ஆடையை தொட்டமாத்திறத்தில் குணம் பெற்றதை கூறுகின்றது. யூத சமுதாயத்தில் பெண்களின் சுதந்திரம் இல்லாத நிலையில் பெரும் கூட்டத்தின் மத்தியில் இயேசுவின் பின் சென்று அவருடைய **ஆடையை தொட்டாலே** குணம் பெறுவேன் என்று விசுவசித்ததோடு நில்லாமல் செயலில் சென்று தொட்டு குணம் பெற்றாள்.

லூக்-10,42-ல் கலப்பையில் கை வைத்த பின் திரும்பிப்பார்பவன் தகுதியற்றவன் என்றார் இயேசு. எண்ணித்துணிக கருமம் என்று வள்ளுவமும் கூறுகிறது.

திருமுழுக்குமுதல் இன்றுவரை பெரும்பாடுகள் பலபட்டும் இயேசுவை நம்மால் தொட முடிந்ததா? நமது எண்ணத்தில் துணிச்சலும், **கைகளில் வலிமையும் இருந்தால் கட்டவிழக்கப்பட்ட கால்களால் அவரை அணுகி,** நமது கைகளால் இயேசுவை தொட முடியும் என்பதற்கு, இந்த வெரோணிக்காள் மற்றும் பெரும்பாடுள்ள பெண்ணை விட சாட்சி ஏது?

**இயேசுவை தொடுவோம் நம் பெரும்பாடுகள் அகலட்டும்,** அகிலம் நம்முள் அந்த அழகான வதனத்தை கண்டு ஆர்பரிக்கட்டும்.

**ஜெபம்**

உடலை கொன்றபின் அதற்குமேல் ஒன்றும் செய்ய இயலாதவாகளுக்கு அஞ்சாதீர்கள் என்று கூறிய இறைமகனே, ஊக்கமுள்ள உமது ஆவியின் அருளால் எம்மோடு இணைந்து இந்த **கூட்டத்தோடு கூட்டமாய் நிற்கும் உம்மைத்** தொட்டு குணம்பெற அருள்தாரும் ஆமென்.

**ஏழாம் நிலை: இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.**

வார்த்தையை கேட்டோம், வாழ ஆரம்பித்தோம் ஆனால் '**தடுமாற்றம்**' நம்மை மீண்டும் விழவைக்கின்றது.

அருள-4,1-42-ல் இயேசு ஓர் சமாரிய பெண்ணோடு பேசியதையும், பின் அவ்வூர் மக்கள் பலரும், இயேசு சொன்ன வார்த்தைகளைக் கேட்டு; அவர் உண்மையாக உலக மீடபர் என்பதை அறிந்ததாகவும் வாசிக்கின்றோம்.

விவிலியப்படி இயேசு இந்த சமாரியப் பெண்ணிடம்தான் தனிமையில் அதிகம் பேசினார். இருந்தும் இந்த சமாரியப் பெண் **அவரை விசுவசிக்க தடுமாற்றம் அடைய காரணம்** என்ன?

1) அவளுள் குடிகொண்டிருந்த நான் ஒரு சமாரியப் பெண் என்ற **தாழ்வுநிலை** …. யூதரான இயேசுவுக்கு தண்ணீர் தர, தயக்கத்தை தந்தது.
2) கிணறு ஆழமானது, அவரிடம் பாத்திரம் ஒன்றுமில்லை, பருகுவதற்கு ஜீவநீர் தருவேன் என்கிறாரே இவர் என்ன நம் தந்தை யாக்கோபை விட பெரியவரோ? என்று இயேசுவைப் பற்றி **வியப்பு** அடைந்தது……….
3) தனது அந்தரங்க வாழ்வை அப்பட்டமாக கூறியதைக் கேட்ட அப்பெண் இவர் என்ன மெசியாவோ? என **சந்தேகப்பட்டது**.

இந்த சமாரியப் பெண்ணை, அவளுள் இருந்த **தாழ்வு நிலை** ,**வியப்பு, சந்தேகம்** இயேசுவின் வார்த்தைகளை, நம்ப விடாமல் தடுமாற வைத்தன. இவள் சமாரியப் பெண் என்பது எப்படி உண்மையோ, அதுபோலவே **'இவள் இறைவனின் பிள்ளை'** என்பதும் உண்மை.

தந்தை திரும்பி வந்த ஊதாரி மைந்தனை, **பாவி (தாழ்வுநிலை)** என்று ஒதுக்கவில்லை. அதே போல் அவனும் தந்தையின், **பேரன்பை நினைத்து வியப்பு** அடையாமல் மகன் என்ற உறவில், அவரை காண விரைந்தான். எனவே லூக்-15-17-ன் படி ஊதாரி மைந்தனைப் போல் நாம் விழுந்தாலும் ……….**எழுந்து தந்தையிடம் செல்வோம்**.

**ஜெபம்**

உம்மை அண்டி வர என்னுள் **தாழ்வுநிலை (பாவி) வியப்பு (தந்தையின் பேரன்பு) சந்தேகம் (என்னை ஏற்பாரோ)** ஆகிய **தடைக்கற்கள்** இருந்தாலும் உமது வார்த்தையை கேட்டு நீரே எனது மீட்பர் என்பதை ஏற்று அனுபவித்திட அருள்தாரும்.

**எட்டாம் நிலை: தன் பின்னே அழுதுக்கொண்டு வந்த யூத பெண்களுக்கு ஆறுதல் கூறுகின்றார்.**

இயேசு தனது மரணவாயிலை நெருங்கும்போது, எருசலேம் நகர மகளீரே எனக்காக அழாதீர்கள், என்று கூறியதாக லூக்-23,28-ல் வாசிக்கின்றோம்.

லூக்-17,11-17-ல் நயீன் நகரத்து கைம்பெண்ணைப்பார்த்து, மனம் இரங்கி அழாதே என்றும் அருளப்பர் -11,32-35-ல் இயேசு, மரியாளும் அவருடன் வந்த யூதர்களும் அழுவதைப்பார்த்து, மனம்குமறி கலங்கி கண்ணீர் விட்டார் என்றும் படிக்கின்றோம்.

இந்த இயேசு மேற்கூறிய **வெறும் வாய் வார்த்தைகளோடு நின்றிருந்தால்** இந்நிகழ்வுகள் இன்று நினைவுகூறப்பட மாட்டாது. ஆனால் அவரோ **ஆறுதல் சொன்ன உடனேயே தனது செயல்களால்** நிலையான நிறைவைத் தந்தார்.

ஆம் நயீன் நகர விதவைத்தாய்க்கு மகனையும், மார்த்தாள் மரியாளுக்கு சகோதரனையும் உயிரோடு தந்தார். அது மட்டுமல்லாமல் யூத பெண்களுக்கும் அவருடைய சந்ததியாருக்கும், தன்னையே பலியாக்கி மீட்பை த்நதார். **கவனிக்க வார்த்தை வழியாக புறப்பட்ட ஆறுதல் செயல்களின் பலனாக உயிர் பெற்று நின்றது.**

நமது நிலை; வாய்வார்த்தைகளால் ஆறதல் கூறுவதில் நாம் வல்லவர்கள்தான், நமது செயல்களால் வல்லவர்களா? நமது கிறிஸ்துவ வாழ்வின் வெளி அடையாளமாக நாம் ஏற்றுக்கொள்ளும் ஒறுத்தல்களால், ஒரே ஒரு மனிதன் ஆறுதல் அடைந்தால் கூட நாமும் இறைமக்களே; இயேசுவின் உறவினர்களே.

இன்று

**எத்தனை கண்கள் ஒரு புன்முறுவலுக்காக ஏங்குகின்றது.**

**விழுந்துவிட்ட எத்தனை கரங்கள் யார் என்னை தூக்குவார் என துடிக்கின்றது. எத்தனை கால்கள் என் கட்டுகளை யார் அவிழ்பாரோ என்று கதறுகிறது. எத்தனை உள்ளங்கள் என் மனச்சுமையை யார் இறக்கி வைப்பார்களோ என தேடுகிறது.**

சுற்றிப்பார்ப்போம் - நம்மைச்சுற்றிப்பார்ப்போம்

**நம் தேடுதலுக்கு நிச்சயம் விடை உண்டு.**

**ஜெபம்**

துன்பங்கள் மனித வாழ்வில் தொடரும் ஒரு பங்கு என்றாலும, ஆறுதலும் அரவணைப்பும்; அதன் மற்ற பங்குகள் என்று என் வாழ்வை தொடர, அருள் தாரும். ஆமென்.

**ஒன்பதாம் நிலை: சிலுவையின் பாரத்தால் இயேசு மூன்றாம் முறை கீழே விழுகின்றார்**

மாற்-14-38,-ஆவி ஊக்கமுள்ளதுதான் ஆனால் ஊன் உடலோ வலுவற்றது, எனவே சோதனைக்கு உட்படாதபடி விழிந்திருந்து ஜெபியுங்கள் என்றார் இயேசு.

.

காலை, மாலை, இரவு என **மூன்று பொழுது** முடியும் பொழுது நாள் முடிகிறது.
**மூன்று வேளை** உணவு மனிதரின் முழு ஆகாரம் ஆகின்றது.
திருமாங்கல்யத்தில் இடப்படும் **மூன்று முடிச்சு** குடும்ப வாழ்வின் ஆரம்பம் ஆகின்றது.
இறைவனுக்கு அளிக்கப்படும் **மூன்று நித்திய வார்த்தைபாடுகள்** துறவறத்தின் துவக்கமாயிற்று.
தொடர்ந்து **மூன்று முறை வெல்லப்பட்ட** சுழற்கோப்பை அந்த அணிக்கு சொந்தமாயிற்று.
**மூன்று முறை சொல்லப்படும் மன்னிப்பு மன்றாட்டு** நம் மனங்களுக்கு மீட்பு ஆயிற்று.
ஆக மூன்று முறை செயல்படும் **ஒருசெயலும் ஒரு முழுமையின்** அடையாளமாயிற்று.
இறைமகன் இயேசுவின் இந்த மூன்று வீழ்ச்சிகள், தொடரும் விண்ணக வாழ்க்கை பயணத்தில் **வீழ்ச்சி நிச்சயம்** என்று பறைசாற்றுகின்றது.

நாமும் நமது வாழ்வில், நம்மை, நமது திருமறையை இந்த உலகை, ஏன் **'நாமும் இறைமக்களே'** என்ற **உண்மையை மறுக்கும் அளவிற்கு பல வேளைகளில்** கீழே விழுந்து விடுகின்றோம். விவிலியத்தில் வரும் கனானேயா பெண்ணை பாருங்கள், தன் மகள் நலன் கருதி - தாவீது மகனே இரக்கமாயிரும் என்று ஆண்டவரின் காலில் விழுந்த அவளுக்கு; மாற்-7-27-ன்படி, பிள்ளைகள் உணவை நாய்களுக்கு போடுவது நல்லதல்ல என்ற இயேசுவின் பதில், அவளை முற்றிலும் தளர்ந்து போக செய்தது.

**' இருந்தாலும் அவளோ,'**
**பிள்ளைகளுக்கும் - நாய்குட்டிகளுக்கும் உள்ள நட்பையும்,**
**மனுமகனுக்கும்-மனிதனுக்கும் உள்ள உறவையும்**

நினைவில் கொண்டு, மாற்-7-28-ன் படி, ஆம் ஆண்டவரே மேசைக்கடியில் பிள்ளைகள் சிந்தும் சிறு துண்டுகளை நாய்குட்டிகளும் திண்கின்றனவே. என்று பதில் தந்து தன் மகளின் சுகத்தைப் பெற்றுக்கொண்டார்.

**எத்தனை முறை விழுந்தோம் என்பதை விட**
**எதை பிடித்து எழுந்தோம் என்பதே முக்கியம்.**

இவரே என் அன்பார்ந்த மகன் (மத்-17,5) என்ற தந்தையின் வாக்கு, இயேசுவை எழுந்து நடக்கச் செய்தது. உயிரைத் தவிர மற்ற அனைத்து நிலைகளிலும் துன்பப்பட அழைக்கப்பட்ட யோபுவின் நிலை நமக்கு வந்தாலும் மாற்-7-29-உள்ள- "இந்த **வார்த்தையின் நிமித்தம்** உன் மகள் குணம் பெற்றாள்" என்ற இயேசுவின்

வார்த்தைகளை வாழ்வாக்குவோம், குணம்பெறுவோம், எழுந்து நடந்திட முயற்சி செய்வோம்.

**ஜெபம்**

எத்தனை முறை விழுந்தோம் என்பதை விட, எதைப்பிடித்து எழுந்தோம் என்பதே முக்கியம் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். **கனானேய பெண்ணின் எழுச்சி** எங்கள் நம்பிக்கையை, உமது வார்த்தை வழியில் பலப்படுத்தி பயன் பெற செய்திடட்டும். ஆமென்.

**பத்தாம் நிலை** : **இயேசுவின் ஆடையை உரிகிறார்கள்.**

தாபோர் மலை மீது மறு உருவம் பெற்று, ஒளியாக காட்சி தந்த இயேசு, கல்வாரியில் பிறந்த மேனியாக நிறுத்தப்படுகிறார்.

நிர்வாணம் எப்போது உணரப்படுகிறது, நாம் பார்க்கும் போது. இயேசு கூறுகிறார் **உன் கண்ணே உன் உடலுக்கு விளக்கு** என்று. ஆதி மனிதன் ஆதாமின் நிர்வாணம் **விலக்கப்பட்ட கனியை** தின்றபின், அவனது கண்கள் திறக்கப்பட்டதால் அவனுக்கு உணரப்பட்டது. **இன்று நமது கண்கள் எதனால் திறக்கப்படுகிறன. இயேசுவின் ஒளியினாலா.? மாறாக விலக்கப்பட்ட கனியினாலா?**

அருள-8,3-11-ல் இயேசுவின் முன் நிறுத்தப்படும் பெண்ணானவள் மறைநூல் அறிஞர், பரிசேயர்களுக்கு ஓர் விபச்சாரியாக காணப்பட்டாள். இயேசுவிற்கோ **இறைசாயல் கொண்ட ஓர் பெண்ணாகக் காணப்பட்டாள்**. எனவே **"இனி பாவம் செய்யாதே போ"** என்ற ஒரே வாக்கியத்தில் அவளை அனுப்பினார்.

இறைவனால்படைக்கப்பட்ட மனிதருக்குள், என்றுசாத்தானின்-உறவு கலக்கின்றதோ அந்த நிமிடமே, அவனது படைப்பின் தனித்துவம் (Originality) **ஆடை களை யப்படுகிறது.** முடிவு , அவன் தன்னைப் **படைத்தவன் முன் நிர்வாணியாகின்றான்.**

இன்று நாம் வாழும் சமுதாயத்தில் நாம் கைகோர்த்துள்ள அவலங்களை பாருங்கள். தனித்துவம் இல்லாத குடும்ப அமைப்புகள், சமுதாய நிர்வாகங்கள், அதிகார வர்க்கம், மருத்துவ துறை, நீதித்துறை என எங்கு பார்த்தாலும் கலப்படம் (Auditration) மலிந்து கிடக்கின்றது. மனிதகுல நல்வாழ்விற்காக இறைவனால் தரப்பட்ட இந்த **மதிப்பீடுகள்-அனைத்தும் நமது தேவைகளுக்காக** கலப்படத்தால் நிர்வாணம் ஆக்கப்பட்டுள்ளது. **நமது தேவைகள் விலக்கப்பட்ட கனியாகி, நமக்கு உணவுமாகி இந்த அவலங்களை ஏற்றுக்கொள்ளச் செய்கிறது.**

வாருங்கள் இயேசுவின் நிர்வாணத்தைப் பார்த்து வேதனையுறும் நாம் நம்மை அறியாமலேயே நமது ‘**தேவைகளின் அவலங்களால்**’ எப்படி இறைவன் முன் அந்த ஆதாமைப்போல் **நிர்வாணமாக நிற்கின்றோம்** என்பதை சிந்திப்போம்.

**ஜெபம்**

வாழ்வின் எந்த நிலையிலும், தந்தை மகன் உறவால் நாங்கள் அணிந்துக்கொண்ட ஆடையை; **சாத்தான்-நான்** என்ற **கலப்படத்தால்** களைந்து; நிர்வாணியாகாமல் இருக்க உலகின் ஒளியான இயேசுவே உம் வார்த்தையின் வல்லமையை தாரும்.

**பதினோராம் நிலை: சேவகர்கள் மூன்று ஆணிகளால் இயேசுவை மரச் சிலுவையில் இணைத்தனர் (அறைந்தனர்)**

மரச்சிலுவை மூன்று ஆணிகளின் துணையோடு இயேசுவிற்கு பின்புறமாக அவரோடு **பிரிக்க முடியாத நிலையில் இணைந்தது**. அந்நாள்வரை யாரும் பார்க்க விரும்பாத அந்த மரச்சிலுவையை **ஓர் அடிமை தலைவனைத் தாங்குவது போல்** இயேசுவை தன்னுள் தாங்கியதால் உலகோர் பார்வையில் **மீட்பின் அடையாளமாக வெற்றியின் சின்னமாக நிலைநின்றது.**

லூக்-7,36-50-ல் நினைவுகூறப்பட்ட பெண், ஓர் அடிமை தலைவனின் பின் இருப்பது போல் இயேசுவின் பின் புறமாக அமர்ந்து அவள் செய்த மூன்று செயல்களின் மூலம்

(1) ஆண்டவரின் பாதத்தை **கண்ணீரால் கழுவி** (2) தன் **கூந்தலால் துடைத்து** (3) **முத்தமிட்டு தைலம் பூசியதன்** வழியாக தன்னை இயேசுவின் அடிமை என உறுதி செய்தாள். யூத வழக்கப்படி, தலைவன் வீட்டிற்குள் வரும்போது, **அவனது பாதத்தைக் கழுவி துடைத்து முத்தமிட்டு வரவேற்க வேண்டியது அடிமையின் கடமை**. இந்த அடிமையின் செயலால் நிறைவு பெற்ற இயேசு, அவளைப்பார்த்து உன் விசுவாசம் உன்னை மீட்டது, **சமாதானமாய் போ** என்று சொன்னார்.

மரச்சிலுவையும் இந்த பெண்ணும் தங்களுடைய செயல்களால், தங்களை ஆண்டவரின் அடிமை என உலகிற்கு அடையாளம் காட்டின.

**‘மீட்பின் - சமாதானத்தின்’ - அடையாளங்கள் ஆயின.**

ஆதியில் பரமபிதா அவரது சாயலாக படைக்கப்பட்ட நமக்கு ஆவியை தந்து படைப்புகளுள் உயர்வான **‘மனிதன் என்ற அடையாளத்தை’** அனைத்து படைப்புகளின் மத்தியில் கொடுத்து பெருமைப் படுத்தினார். இன்று சிலுவைக்கு

முன் நாம் அனைவரும் சாட்சிகளாக, இயேசுவின் அடிமைகளாக, உலகோர் நடுவில் **கிறிஸ்து + அவர்கள் என்ற மகிமையின் அடையாளம்** - பெற்றவர்களாய் பெருமை படுகின்றோம்.

நாமும், உலகம் நமக்கு தந்துள்ள கிறிஸ்தவர்கள் என்ற அடையாளத்தை நமது வாழ்க்கையில் முன்னிலைப்படுத்தி லூக்-9.23-ன் படி **நமது சிலுவையை நாமே சுமந்து கொண்டு இயேசுவை தாங்கும் அடிமைகளாய் வாழும் போது**, படைப்பினுள் பெருமை உள்ள மனிதனாகவும், இயேசுவை தாங்கும் சிலுவையாகவும், **அன்பின் அடிமையாகவும்** நிற்போம்.

**ஏனெனில் இதோ ஆண்டவரின் அடிமை என தாய் மரியாள் கூறினாள், உலகம் மீட்பை கண்டது.**

**ஜெபம்**

இயேசப்பா எனது **"சொல், செயல், சிந்தனைகளால்"- மூன்று ஆணிகளால் உம்மை தாங்கும் அடிமைகளாய்** இந்த உலகம் எங்களை கண்டு மகிழ நீர் எமக்குள் ஈந்த உயிர் மூச்சு, எமக்கு வாழ்வு தரட்டும்.

**பன்னிரெண்டாம் நிலை: இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்.**

மத்-26-39-ல் இயேசு கெத்ஸமெனியில், **'என் தந்தையே கூடுமானால் இத்துன்பக்கலம் என்னை விட்டு அகலட்டும் எனினும் என் விருப்பப்படி அல்ல உமது விருப்பப்படியே ஆகட்டும்**' என்று ஜெபித்தார்.

தன்னையே மறுத்து, தன் சிலுவையை சுமந்து கொண்டு என்னை பின் செல்லட்டும் என்று கூறியவர்; கல்வாரியின் உச்சியில் தன்னையே மறுத்து தந்தையை எப்படி பின் செல்ல வேண்டும் என்பதை - **உரக்க கூவி, தந்தையே உமது கரங்களில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் என்று** கூறிய பின், தலையை சாய்த்து உயிரை விட்டதை முன் மாதிரியாக நமக்கு காட்டியதை; இப்போது நினைவுகூறுகின்றோம்.

இயேசு தன்னிடம் கடைசியாக மீதமிருந்த ஆவியை, முழுமையாக இறைவனின் கரங்களில் ஒப்புக் கொடுத்தார். அவர் வாழ்ந்த காலத்தில் லூக்-21-1-4 வரை உள்ள வசனங்களில் **ஓர் முழுமையான காணிக்கையை – அர்ப்பணத்தை விளக்குகின்றார்.** ஆம் அதில் ஏழை கைம்பெண் லூக்-21-4-ன் படி தனது வறுமையிலும் தன் பிழைப்பிற்கான முழுவதையுமே இறைவனுக்கு காணிக்கையாக்கியதை பறைசாற்றுகின்றார். இன்று நம்மையும் இறை சித்தத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்க அழைக்கின்றார்.

ஓர் அன்னை தெரசா முழுமையாக காணிக்கையானார், கொல்கொத்தா நகர தொழு நோயாளிகள் வாழ்வுபெற்றனர். இன்று நமது மத்தியில் நாட்டின் பாதுகாப்புதுறை, காவல்துறை, மருத்துவதுறை, நீதித்துறை மற்றும் பள்ளி, அனாதை இல்லங்கள், ஆதரவற்ற, கைவிடப்பட்ட முதியோர் இல்லங்கள் என அனைத்திலும் **தங்களை முழுமையாக மறுத்து பிறர் நலனையே முழுமையாக முன்னிலைப்படுத்தி மூச்சு விடும் பொது நிலையினர், துறவற சகோதர சகோதிரிகள் என எத்தனை பேர்,**

**நினைத்துபார்ப்போம் - சற்று திரும்பிப் பார்ப்போம்**

இயேசு தன்னை மறுத்து பிறர் மீட்பு கருதி, தன்னை முழுமையான அர்பணம் ஆக்கினார். விதவைப் பெண் தன் வறுமையிலும - தனது பிழைப்பிற்கான முழுவதையும் இறைவனுக்கு காணிக்கையாக்கினார். இன்றும் சராசரி மனிதரிடமிருந்து

**“அவங்க நல்லா இருக்கனும்னா நா இப்படிதா இருக்கனு”**

என்ற வார்த்தைகள் நமது காதுகளில் எத்தனை முறை ஒலித்திருக்கிறது, மறுக்க முடியுமா? என்றாவது ஓர் இயேசுவாக, காணிக்கை தரும் விதவை பெண்ணாக, தன்னை அர்ப்பனித்த அன்னை தெரசாவாக, குறைந்தபட்சம் **‘அவங்க நல்லா இருக்கனும்’** என நினைக்கும் சராசரி மனிதன் - ஆக முயற்சித்திருக்கிறோமா? - **இனி முயற்சிப்போம்.**

கெத்ஸமெனியில் சராசரி மனிதனாக இயேசு ஜெபித்ததை கேட்டோம். பிலாத்து அருள-19-5-ல் மக்களைப் பார்த்து **“பாருங்கள் இதோ மனிதன்”** என்று இயேசுவை காட்டினார். இன்று நம்மையும் பார்ப்பவர்கள் பிலாத்துவைப்போல் **“இவர்கள் மனிதர்கள்”** என்று கூறட்டும்.

**ஜெபம்**

எங்களுக்கு தீமை செய்பவரை நாங்கள் பொறுப்பதுபோல எங்களையும் பொறுத்தருளும். இறைவா **மாற்றம் ஒன்றே மாறாதது**, எனவே எங்களையும் மனிதர்களாக மாற்றும் ஐயா. ஆமென்.

**பதிமூன்றாம் நிலை: அன்னையின் மடியில் இயேசுவை வளர்த்துகிறார்கள்.**

உமது உள்ளத்தை ஓர் வாள் ஊடுறுவும், இதனால் பலருடைய உள்ளங்களில் இருந்து எண்ணங்கள் வெளிப்படும். லூக்-2.35-

கல்வாரி உச்சியில் அன்னை மரியின் **இந்தநிலை** யாருக்கும் வரக்கூடாது. பெற்றெடுத்த பாலகனை 33 வயது கட்டழகனை உயிரற்ற உடலாக அவரது அரவணைப்பில் ஏற்க வேண்டிய நிலமைக்கு ஆளானார். நயீன் நகர கைம்

பெண்ணிற்கு இதே நிலைதான், ஆனால் இயேசு மனமிரங்கி அவளைப்பார்த்து அழவேண்டாம் என்று கூறியதோடு நில்லாமல் மகனை உயிர்த்தெழச் செய்து அந்த அன்னையின் கண்ணீரைப் போக்கினார்.

சற்று முன் சிலுவையின் அடியில் அவரது அன்னையை **நமது அன்னையாக தாரை வார்த்துக் கொடுத்தார்.** நாமும் அவரது பிள்ளைகள் என மார்தட்டுகின்றோம். அப்படியாயின் அன்னைக்கு, மரியன்னைக்கு **ஆறுதல் யார் தருவது**? ஒரே குழப்பம், கவலை, **முடியவில்லையே என்ற ஆதங்கம் தலை தூக்குகின்றது** அல்லவா?

இதோ மரியாள் கூறுவதை கேளுங்கள்:- **கடவுள் என் அடைக்கலமும் பலமுமாயிருக்கிறார்.** நெருக்கடி நேரத்தில் மகவை பெற்றெடுக்க இடம் தேடியபோதும், அவரைக் காப்பாற்ற எகிப்து ஓடிய போதும் **எனக்கு உறுதுணை என காட்டியுள்ளார்.** ஆகவே வையமே புரண்டாலும், கடல் அலைகள் கொந்தளித்து எழுந்தாலும் **எனக்கு அச்சமில்லை.** பெத்தலை முதல் கல்வாரி வரை **அமைதியுடன் இருந்து அவர் என் கடவுள் என உணர்ந்துக் கொண்டேன்.** அன்று அவரில் கொண்ட நம்பிக்கை என்னை அவரது அடிமையாக்கியது. இன்று அவரோடு வாழ்ந்த 33 வருட வாழ்வின் அனுபவம் அமைதிக்கு என்னை அழைத்துச் சென்றது. **'வாழ்வின் அனுபவம்'** உங்களையும் அமைதிக்கு அழைத்துச் செல்லட்டும். அந்த அமைதி உங்களுக்கு உயிராய் இருக்கட்டும்.

அவன் அப்படி, இவன் இப்படி என்று பரபரப்பு வேண்டாம். மாறாக **நீ எப்படி என யோசித்துப்பார்.** **"என் நம்பிக்கை, இறைவன் மீது கொண்ட விசுவாசம்",** என்னை இந்தச் சூழலில் எப்படி வடிவமைத்துள்ளது என்று பாருங்கள . நீங்கள் கல்வாரியில் நான் பெற்றெடுத்த பிள்ளைகள். எனவே **'தாயைப்போல் பிள்ளை'** என்ற உங்கள் பழமொழிக்காவது சாட்சியாய் வாழுங்கள். தன் பின்னே அழுதுக்கொண்டு வந்த மகளிரை என் மகன் அழ வேண்டாம் என்றார். நீங்களோ அவரது சகோதரர்கள், எனது பிள்ளைகள் சங்-45-ல் கூறுவதுபோல **" அமைதியுடன் இருந்து இயேசுவை இறைவன் என்று உணர்ந்து கொள்ளுங்கள்"**

**ஜெபம்**

இறைவா சங்- 45-ல் கூறுவது போல் **அமைதியுடன் இருந்து** எந்தச் சூழலிலும் மரி அன்னையைப் போல என் தேவன் நீரே என்று சான்று பகர்ந்திட அருள் தாரும். ஆமென்.

**பதினான்காம் நிலை :   இயேசுவை கல்லரையில் அடக்கம் செய்கிறார்கள்**

அருள-20,40-42-ல் இயேசுவின் சடலத்தை எடுத்து யூதரின் அடக்க முறைப்படி, பரிமள பொருட்களுடன் துணிகளில் சுற்றி கட்டினார்கள். ஒரு புது கல்லறை அருகிலே இருந்த தோட்டத்தில் இருந்தது. இயேசுவை அதில் வைத்தனர் என்று படிக்கின்நோம்.

**கடமையும் ஏற்புடமையும்** நமது வாழ்வின் மூலதனம் ஆகட்டும்.
அவருடை சுமை எளிது என்பதால் அவரை **சுமப்பதில் சுகம் பெற** முனைப்படுவோம்.
வாழ்வுதரும் **வார்த்தைகளால் இடறல் படாமல்** காத்துக்கொள்வோம்.
என் **சகோதரத்தை சந்திப்பதில்** சாட்சிகள் ஆவோம்.
அவர்களுடைய **கட்டுகளை அவிழ்த்துவிடுவதில்** மகிழ்ச்சி அடைவோம்.
தைரியத்துடன் **அவரைத் தொட்டு அவர் முகத்தை** ஆராதித்திட ஆர்வம் கொள்வோம்.
தடுமாற்றங்களின் தாயான **தாழ்வு நிலை, வியப்பு, சந்தேகங்களை** தகர்த்தெரிவோம்.
**ஆறுதலும், அரவணைப்பும்** பிறருக்கும் உரியவை என்று அவைகளைப் பகிர்ந்தளிப்போம்,
எத்தனை முறை விழுந்தாலும் **இயேசுவைப் பற்றிக்கொள்வதில்** தளராமல் இருப்போம்.
**தந்தை மகன் உறவின் ஆடைகளை** அணிந்தவர்களாய் நிமிர்ந்து நிற்போம்.
**சிந்தனை, சொல்,செயல்** என்ற முப்பெரும் ஆணிகளால் நம்மை அடிமையாக்குவோம்..
பிலாத்துவின் பார்வையில் **இதோ மனிதன்** என்று அடையாளம் காணப்பட பலியாகுவோம்..
கல்வாரியில் அன்னையின் **அமைதியின் அனுபவத்தை** சுவாசிக்க தோள் கொடுப்போம்.
**நானே அமைதி** என்ற இறைமகன் இயேசுவை புரிந்துக்கொள்வோம்.

இன்று உலகம் இதனால் எங்களை, கல்லறைககே அழைத்தாலும்
**உலகில் உப்பாக வாழ்வதில் பெருமை உள்ளவர்களாய்**
உயிர்ப்பில் உம்மை மட்டும் தேடி வருவோம். வானக பயணத்தின
வழியில் **கல்லறைகள் ஒரு பாலைவனச் சோலை** என்பதை அறிவோம்.
மூன்று நாட்களுக்கு பின் உயிர்ப்பை கண்ட நீர் உலகம் முடிவில்
எம்மையும் உயிர்க்க வைப்பீர் என்பதையும் விசுவசிக்கின்றோம்.

ஆம், அருள-6-29-ன் படி

**"அவர் அனுப்பியவரை விசுவசிப்பதே கடவுளுக்கு ஏற்ற செயல்"**

**ஜெபம்**

**"பொறுத்தருளும் கர்த்தாவே. பொறுத்தருளும்"**